# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மார்ச் 5 2023

Weekly E-paper ● March 5, 2023




# புதிது புதிதாய்ப் புறப்படும் சூழ்ச்சிகள்!

சுப.வீரபாண்டியன்

## நாடு நலம்பெற நம் தலைவர் காட்டும் பாதை

பொள்ளாச்சி மா.உமாபதி

## என்னே ஒரு அறிவாற்றல்! இவரல்லவா ஆளுநர்!

தலையங்கம்

## பார்ப்பனியத்தைக் காப்பாற்றும் அதானி! அதானியைக் காப்பாற்றும் பார்ப்பனர்கள்!

உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மார்ச் 5 2023 Weekly E-paper ● March 5, 2023


# புதிது புதிதாய்ப் புறப்படும் சூழ்ச்சிகள்!

**சுப.வீரபாண்டியன்**

திமு கழகத்தின் தலைவர், திராவிட நாயகனின் பிறந்தநாள் விழா கொண்டாட்டங்களும், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் முடிவுகளும் எதிரிகளை நிலைகுலையச் செய்துள்ளன. அதனால் புதிது புதிதாய்ச் சில சூழ்ச்சிகள் இங்கே புறப்படுகின்றன!

மார்ச் 1 சென்னையில் நடைபெற்ற தன் பிறந்த நாள் விழாவில், இறுதியாகப் பேசிய நம் கழகத்தின் தலைவர், மூன்று செய்திகளை அழுத்தமாகப் பதிவு செய்தார். அது இந்தியாவின் எதிர்காலத்திற்குத் திசை காட்டும் விடிவிளக்காய் அமைந்தது! அந்த மேடையில் உத்தரப்பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவும், பீகார் மாநிலத்தின் இன்றைய துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவும் இருந்தனர்.

இன்றைய ஆளும் கட்சியான பாஜகவிற்கு எதிராக இந்தியாவில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் ஓர் அணியில் இணைய வேண்டும் என்றும், காங்கிரசை விட்டுவிட்டு அந்தக் கூட்டணி அமையக்கூடாது என்றும், தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி என்பது சந்தர்ப்பவாதம் ஆகிவிடும் என்றும் மூன்று திசைகாட்டிகளை அன்று நம் முதலமைச்சர் மேடையில் பதிவு செய்தார்! மூன்றும் முத்தான கருத்துகள்!

திராவிட நாயகனின் தெளிவான இந்தப் பார்வை, எங்கே எதிர்காலத்தில் நம் கட்சியையும், ஆட்சியையும் நிலைகுலையச் செய்து விடுமோ என்ற அச்சம் காரணமாகவோ என்னவோ, இப்போது ஒரு வதந்தியைத் திட்டமிட்டு இந்தியா முழுவதும் பரப்பி உள்ளனர். தமிழ்நாட்டிற்கு வட நாட்டிலிருந்து வேலைக்கு வந்த தொழிலாளர்கள் அடித்து நொறுக்கப்பட்டு, தூக்கிலும் ஏற்றப்பட்டு இருக்கிறார்கள் என்பதேஅந்த வதந்தி!

தமிழ்நாட்டில் எந்த ஊரில், எந்த நாளில் அப்படி ஒரு நிகழ்வு நடைபெற்றது என்னும் எந்தக் குறிப்பும், அதற்கான எந்தச் சான்றும் இல்லாமல் இப்படி ஒரு வதந்தி பரப்பப்படுகிறது! இதனால் வடநாட்டில் உள்ள தமிழர்களுக்கு ஆபத்து ஏற்பட வேண்டும் என்பதும், இந்தியாவெங்கும் உள்ள எதிர்க்கட்சிகள் ஒரு நாளும் ஒருங்கிணைந்து விடக்கூடாது என்பதும் இதன் உள்நோக்கமாக இருக்கக்கூடும்!

இது முற்றிலுமாக ஒரு பொய்ச் செய்தி என்றும், திட்டமிட்டு பரப்பப்படும் வதந்தி என்றும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், பீகார் மாநில முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர்களும் உறுதி செய்துள்ளதால், நல்வாய்ப்பாக, பல கலவரங்களும் உயிரிழப்புகளும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன!



வடநாட்டில் இருந்து இங்கு வந்து பொருளாதார ஆதிக்கத்தை நிலை நிறுத்த முயற்சி செய்யும் குஜராத் சேட்டுகள், ராஜஸ்தான் மார்வாரிகளைத்தான் நாம் எதிர்த்திருக்கிறோமே தவிர, வடநாட்டு மக்களை, அதுவும் கூலித் தொழிலாளர்களை ஒரு நாளும் நாம் வன்முறை கொண்டு தாக்கியது இல்லை. மார்வாரிகளை எதிர்த்துத் தந்தை பெரியார் அவர்கள் நடத்திய போராட்டம் கூட, சற்றும் வன்முறை அற்றது என்பதை நாம் அறிவோம்.

அண்மையில் வடநாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர், வாய் பேச முடியாத தன் குழந்தையைத் தமிழ்நாட்டிற்குத் தூக்கி வந்ததாகவும், தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்று இன்று மகிழ்ச்சியாக இருப்பதாகவும், தமிழ்நாட்டிற்கு நன்றி என்றும் கூறியிருக்கிறார்! அதைப் போலவே தன்னை நரபலி கொடுக்க முயற்சித்த, ஆர் எஸ் எஸ் அமைப்பைச் சேர்ந்த தன் வளர்ப்புத் தாயிடமிருந்து தான் தப்பி வந்துள்ளதாகவும், தமிழ்நாடுதான் பெண்களுக்குப் பாதுகாப்பான இடமாக இருக்கிறது என்றும், மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பெண் கூறியுள்ளதும் நாம் அறிந்த செய்திகள்!

எதிரிகள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்பிவிட்டு, பாரத் மாதா கி ஜே என்று சொல்லுவதால், நாட்டிற்கு ஆபத்தும் அவமானமும்தான் வந்து சேருமே தவிர, ஒருபோதும் ஒற்றுமையும் வெற்றியும் வராது!

இன்னொன்றையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் கடந்து வந்த பாதை கரடு முரடானது. காடுகளையே கடந்து வந்த வரலாறு, எங்கள் திராவிட இயக்கத்தின் வரலாறு! நெருஞ்சி முள்களைப் பாதையில் பரப்பி, எங்களின் நீண்ட பயணத்தை இன்றும் என்றும் உங்களால் தடுத்துவிட முடியாது!

●

# நாடு நலம்பெற நம் தலைவர் காட்டும் பாதை

பொள்ளாச்சி மா.உமாபதி

அகில இந்திய அரசியலில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்த முடிவுகள் எப்போதும் நாட்டுக்கு நலம் பயப்பதாகவும் நாட்டின் ஒற்றுமைக்கு வலிமை சேர்ப்பதாகவும் அமைந்துள்ளன.

1969ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில் விவி கிரி அவர்கள் வெற்றி பெற திராவிட முன்னேற்றக் கழகம்தான் முழு காரணமாக அமைந்தது.

1971 ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் பேரியக்கம் பிளவு பட்டு நின்ற போது மூத்த தலைவர்கள் எல்லாம் ஓர் அணியில் திரண்ட போதும் தலைவர் கலைஞர் இந்திரா காந்தி அம்மையாரை ஆதரித்து வெற்றி பெற்று ஆட்சியில் அமரச் செய்தார்.

அதே இந்திரா காந்தி அம்மையார் 1975இல் கூட்டணிக் கட்சியாக இருந்தாலும் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்த போது துணிவுடன் அதை எதிர்த்துக் கண்டனம் செய்தார். இதன் காரணமாக கழக ஆட்சி கவிழ்க்கப்பட்டது. முன்னணித் தலைவர்கள் சிறைபிடிக்கப்பட்டனர்; தளபதி ஸ்டாலின், முரசொலி மாறன், ஆற்காடு வீராசாமி உள்ளிட்ட தலைவர்கள் சிறையில் சித்திரவதைகளுக்கு ஆளாகினர்.




நாட்டில் நெருக்கடி நிலை விலக்கிக் கொள்ளப்பட்டு 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சர்வாதிகார இந்திரா காந்தி அம்மையாருக்கு எதிராக லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அமைத்த வியூகத்திற்குத் தலைவர் கலைஞர் முழுமையாக துணை நின்றார்.

1977இல் அமைந்த ஜனதா கட்சி ஆட்சி, தலைவர்களின் ஒற்றுமையின்மையால் மூன்று ஆண்டுகளில் இரண்டு பிரதமர்களைச் சந்தித்துக் கவிழ்ந்தது. ஒன்றிய அரசு நிலையற்றதாக இருப்பது நாட்டின் நலத்திற்குக் கேடு என்பதால் தலைவர் கலைஞர், “நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சி தருக!!” என்று அழைத்து மீண்டும் அவரை ஆட்சியில் அமரச் செய்தார்.

1989ஆம் ஆண்டு மீண்டும் காங்கிரசுக்கு எதிராக தேசிய முன்னணியை அமைத்து சமூக நீதிக் காவலர் வி பி சிங் அவர்களை ஆட்சியில் அமரச் செய்தார்.

1996ஆம் ஆண்டு தேர்தலில் திமு கழகம் அங்கம் பெற்ற ஐக்கிய முன்னணி ஆட்சி அமைந்த போது பிரதமர் நாற்காலியை கலைஞர் பக்கம் திருப்பிய போது அதனை அன்புடன் மறுத்தார்.

1999இல் அதிமுகவால் 13 மாதத்தில் ஆட்சியைப் இழந்த பாரதிய ஜனதா கட்சிக்குக் குறைந்தபட்ச செயல் திட்டக் கடிவாளத்தைக் கையில் வைத்துக் கொண்டு ஆதரவளித்தார். பிரதமர் வாஜ்பாய் அவர்களின் ஐந்தாண்டு கால முழுமையான ஆட்சிக்குத் துணை நின்றார்.

2004 இல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வர தலைவர் கலைஞர் முழு முதல் காரணமாக அமைந்தார்.

திமு கழகம் சுயநலம் பாராது ஏன் கட்சி நலனைக் கூட பாராது நாட்டின் நலன் கருதி பல்வேறு நல்ல முடிவுகளை எடுத்து உள்ளது.

இப்போது பண மதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரி மூலம் தொழில்துறை சீரழிப்பு, புதிய கல்விக் கொள்கை, சி ஏ ஏ, என் ஆர் சி, விவசாயிகள் விரோத வேளாண் சட்டங்கள், சமஸ்கிருத இந்தித் திணிப்பு போன்றவற்றால் நாட்டைச் சீரழித்து வரும் மக்கள் விரோத பாஜக அரசை எதிர்வரும் 2024 தேர்தலில் தோற்கடிக்க அனைத்திந்திய அளவில் எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் அவர் தன்னுடைய பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் “தமிழ்நாட்டைப் போல ஒற்றுமையான கூட்டணியை அகில இந்தியா முழுமைக்கும் அமைக்க வேண்டும்.” என்று வற்புறுத்தினார். அரசியல் கட்சிகள் தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை மறந்து, விட்டுக் கொடுத்து பாஜகவுக்கு எதிராக ஒன்று சேர வேண்டும். அதே நேரத்தில் காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் கூட்டணி என்று ஒரு சிலரால் சொல்லப்படும் வாதங்களையும் நிராகரிக்க வேண்டும். அது கரை சேராது. தேர்தலுக்குப் பிறகு கூட்டணி வைத்துக் கொள்கிறோம் என்று சொல்வதும் நடைமுறைக்கு ஒத்து வராது என்று தெளிவான ஒரு செயல் திட்டத்தை தளபதி அவர்கள் அகில இந்தியக் கட்சிகளிடம் முன் வைத்துள்ளார்.

இந்தத் திட்டம் தொலைநோக்கானது; தெளிவானது; துணிவானது . உத்திர பிரதேஷ் மாநிலத்தில் அகிலேஷ் யாதவ், சமாஜ்வாடி கட்சியும் பீகார் மாநிலத்தில் நித்திஷ் குமார் தேஜஸ்வி யாதவ் கூட்டணியும், மராட்டியத்தில் சரத் யாதவ் உத்தவ் தாக்ரே கூட்டணியும், தெலுங்கு தேசத்தில் சந்திரசேகர் ராவ் கட்சியும், ஆந்திராவில் ஜெகன்மோகன் ரெட்டி காங்கிரசும், கேரளாவில் சிபிஎம் கட்சியும் தனித்தனியாக வலுவாக இருந்தாலும் அவைகள் எல்லாம் காங்கிரஸ் என்ற நூலினால் ஒருங்கிணைக்கப்பட்ட முழு மாலையாக வெற்றி மாலையாக உருவெடுக்க

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## என்னே ஒரு அறிவாற்றல்! இவரல்லவோ ஆளுநர்!

இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறும் அனைத்து அம்சங்களும் இராமராஜ்ஜியத்தில் இருந்துள்ளன என்று ஆளுநர் ஆர்.என்.இரவி தெரிவித்திருக்கிறார்.

ஆளுநர் இந்தக் கருத்தை தெரிவித்தது அரசியலமைப்பைப் பற்றி தெரியாதவர்கள் முன்னிலையில் அல்ல. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.வைத்தியநாதன் அவர்கள் முன்னிலையில், ஒரு நூல் வெளியீட்டு விழாவில் அவர் இப்படிப் பேசி உள்ளார்.

ஒரு நீதிபதியின் முன்னால் ஒரு ஆளுநர் அரசியலமைப்பைப் பற்றி எவ்வளவு அருமையான கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்? வேறு எந்த நாட்டிலாவது இது போன்ற காட்சிகளை நாம் காண முடியுமா? இப்படிப்பட்ட ஆளுநர் நமக்குக் கிடைத்ததை நினைக்கும் போது அவ்வளவு பெருமையாக இருக்கிறது.

உண்மையில் இந்திய அரசியலமைப்பின் கூறுகள் எவ்வாறு அமைக்கப்பட்டன என்பதை நாம் பார்க்கலாம்.

இந்திய அரசியலமைப்பு ஆங்கிலேயர் ஆட்சியில் 1935ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா ஆக்ட் என்பதை ஏறக்குறைய அப்படியே தழுவி எழுதப்பட்டதாகும்.

மேலும் அரசியல் நிர்ணய சபைக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்ட சட்ட வல்லுனர் பி.என்.ராவ், அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி விவாதிக்க அமெரிக்கா, கனடா, அயர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அமெரிக்கா, அயர்லாந்து அரசியல் சட்டங்களைப் பின்பற்றியே இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இராமராஜ்ஜியம் அமெரிக்காவிலும் அயர்லாந்திலும் நடந்தது என்று இனிவரும் நிகழ்ச்சிகளில் ஆளுநர் சொன்னால்கூட வியப்பதற்கு ஒன்றுமில்லை.

இவ்வளவு அறிவு கொண்ட ஒருவர் நமக்கு ஆளுநராக கிடைத்திருக்கிறார்.

இந்திய அரசியலமைப்பின் தலைமைச் சிற்பி என்று போற்றப்படும் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் இராமராஜ்ஜியத்தின் கூறுகள் குறித்து சொல்லியிருப்பதை நாம் ஆளுநருக்கு நினைவூட்டுவோம்.

“இராமன் அளவுக்கு அதிகமாகவே குடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தான். அப்படிக் குடித்து விட்டு அவன் ஆடும் களியாட்டத்தில் சீதையையும் கலந்துகொள்ளச் செய்தான் என வால்மீகி குறிப்பிடுகிறார்.

போதாதென்று நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அழகிகள் எல்லாம் அந்த அந்தப்புரத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். இந்த அழகிகளின் மத்தியில் இராமன் குடித்துக் கூத்தாடி கலந்து மகிழ்ந்து களிப்புற்றுக்கிடந்தான். இவை இராமனின் ஒருநாள் வாழ்க்கை நிகழ்ச்சிகள் அல்ல. இராமனுடைய வாழ்வின் அன்றாட நிகழ்ச்சிகளே இவை.

<u>நாட்டு நிர்வாகத்தில் இராமன் எப்போதும் பங்கேற்றது இல்லை என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம்.</u>”

(Dr. Babasaheb Ambedkar Writings and Speeches - Volume : 4, Page : 331)

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

2ஆம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும். அதற்கு காங்கிரஸ் கட்சியும் இயன்ற அளவு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று தளபதி அவர்கள் மிகத் தெளிவாக தொலைநோக்கு மிக்க ஒரு அரசியல் பார்வையை முன் வைத்துள்ளார்.

மதவாத சனாதன ஆர் எஸ் எஸ் ஐ பின்னணியாக கொண்ட பாஜக அரசு முழுமையாக தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதுதான் அனைவரின் முழு முதல் நோக்கமாக அமைய வேண்டும் என்பதைத் தன்னுடைய பிறந்தநாள் செய்தியாக தளபதி அவர்கள் முன் வைத்துள்ளார்.

தலைவரின் இந்தச் செயல் திட்டம்தான் இந்தியாவைக் காப்பாற்றும்; ஜனநாயகத்தைக் காப்பாற்றும்; இந்திய ஒற்றுமையை நிலைநாட்டும் ; மதவாத சர்வாதிகாரத்தை வேரறுக்கும்.

யாருடைய ஆட்சி அமைய வேண்டும் என்பதை விட யாருடைய ஆட்சி அமைந்து விடக்கூடாது என்பதுதான் முக்கியம். பாஜகவை எதிர்க்கும் அனைத்துக் கட்சிகளும் இதனையே ஒற்றை இலக்காக திட்டமிட்டு ஒன்று சேர வேண்டும். இந்த ஒற்றுமை உணர்வு வந்து விட்டாலே வெற்றி பெற்று விட்டோம் என்று சொல்லிவிடலாம். மாநிலங்களுக்குள் இருக்கும் அரசியல் வேறுபாட்டை வைத்து தேசிய அரசியலைத் தீர்மானித்தால் இழப்பு நமக்குத்தான் என்பதை அனைத்துக் கட்சிகளும் உணர வேண்டும்.

வருகை தந்துள்ள அகில இந்தியத் தலைவர்கள் இந்தத் தகவல்களை டெல்லிக்கு எடுத்துச் செல்லுங்கள். இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் எடுத்துச் சொல்லுங்கள். ஒற்றுமையை வலியுறுத்துங்கள். வெற்றிக்கு அடித்தளம் இடுங்கள். இப்போது விதைப்போம். அடுத்த ஆண்டு மார்ச் என்பது அகில இந்திய அரசியலுக்கு அறுவடைக் காலமாக அமையட்டும் என்கின்ற தளபதி அவர்களின் வேண்டுகோள் எதிர்கால வலிமைமிக்க இந்தியாவை உருவாக்கும் அடித்தளம். தளபதி அவர்கள் காட்டிய பாதையில் அகில இந்தியக் கட்சிகள் ஒருங்கிணைய வேண்டும்! வெற்றி பெற வேண்டும்!!

# பார்ப்பனியத்தைக் காப்பாற்றும் அதானி! அதானியைக் காப்பாற்றும் பார்ப்பனர்கள்!

**உதயகுமார்**

அதானியின் பங்குச் சந்தை மோசடி குறித்து அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் நிறுவனம் அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையைத் தொடர்ந்து பாஜக அரசுக்குக்கடும் நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. பிரதமர் மோடி அதானி குறித்து வாய் திறக்கவில்லை.

உச்ச நீதிமன்றத்தில் ஹிண்டன்பர்க் அறிக்கை குறித்து விசாரணை நடத்த ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும் என்று சீலிடப்பட்ட கவர் ஒன்றில் வல்லுனர்களின் பெயரை ஒன்றிய அரசுத் தரப்பு அளித்தது. ஆனால் அதனை ஏற்க மறுத்த உச்ச நீதிமன்றம் தற்போது ஒரு வல்லுனர் குழுவை நியமித்திருக்கிறது.

இந்தக் குழுவின் விசாரணை நேர்மையாக நடைபெற்று உண்மை வெளிவர வேண்டும் என்று அனைவரும் எதிர்பார்க்கிறோம்.

ஆனால் அதற்குள் பல்வேறு தரப்பினரும் ஹிண்டன்பர்க் அறிக்கையில் வெளியான தகவல் குறித்து அதானிக்குச் சாதகமான முறையில் கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

அதானியைக் காப்பாற்ற ஊடகங்கள் தொடர்ந்து முயல்கின்றன. பல்வேறு ஆங்கில நாளேடுகளில் நடுப்பக்கக் கட்டுரைகள் அதானியின் மீதான குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்னும் கருத்தைக் கொண்டு சேர்க்கும் வகையில் எழுதப்படுகின்றன.

கடந்த எட்டு ஆண்டுகளாக இந்தியாவின் சில முற்போக்கு ஊடகங்களும் இயக்கங்களும் சொல்லாத ஒன்றை ஹிண்டன்பர்க் சொல்லிவிடவில்லை. டெல்லியில் இருந்து வெளிவரும் ‘Caravan’ ஆங்கில மாத இதழ், கடந்த எட்டு ஆண்டுகளாக பாஜகவின் ஆட்சியில் நடைபெற்ற இது போன்ற முறைகேடுகள் தொடர்பாக அவ்விதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பை “Adani, Ambani and More” என்னும் தலைப்பில் வெளியிட்டது.



ஆய்வு செய்து கண்டுபிடிக்க வேண்டிய அளவிற்கு நுட்பமாக நடந்ததன்று இந்த மோசடி. பட்டப்பகலில் பரிவர்த்தனமாக நடைபெற்றவைதான் இவை. ஆனால் பார்ப்பன ஊடகங்களும், பார்ப்பன அதிகார வர்க்கமும் இதுநாள் வரை இந்த மோசடிகளை வெளியிடாது மறைத்து வந்த நிலையில், இன்று உலக அளவில் பெரிய பேசு பொருளாக உருவானதற்குப் பிறகு மோடியையும் அதானியையும் காப்பாற்றும் வேலையில் முழுமூச்சாக இறங்கி இருக்கின்றன.

மோடியும் அதானியும் பார்ப்பனர்களின் ஆதரவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். மோடி, அதானி வளர்ச்சியில்தான் தங்களுடைய சனாதன தர்மத்தின் வளர்ச்சி இருக்கிறது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

என் டி டிவியின் பெரும்பான்மையான பங்குகளை அதானி வாங்கி இருக்கிறார். ஹிண்டன்பர்க் அறிக்கை குறித்து உலகமே செய்தி வெளியிட்ட வேளையில் என் டி டிவியின் கள்ள மௌனம் கடும் விமர்சனத்திற்கு உள்ளானது.

காங்கிரஸ் கட்சியின் ஊழல்கள் குறித்து இன்று வரையிலும் பேசிக் கொண்டிருக்கும் அனைத்துப் பார்ப்பன ஊடகவியலாளர்களும் தற்போது அதானிக்கு ஆதரவாக பேசி வருகிறார்கள். அன்னா ஹசாரே என்னும் ஒருவர் எங்கு இருக்கிறார் என்றே இப்போது தெரியவில்லை.

ஹிண்டன்பர்க் அறிக்கையின் மூலம் வெளிவந்திருப்பது அதானி ஒருவர் மட்டும்தான். இன்னும் பல பண முதலைகள் பார்ப்பனர்களின் ஆதரவோடு பாதுகாப்பாக இருக்கின்றன.

இவர்களின் மோசடிகளைப் பாதுகாத்து, தேர்தல் பத்திரங்களாக பாஜக அறுவடை செய்கிறது. ஆர் எஸ் எஸ்இன் நேரடி மற்றும் மறைமுக நடவடிக்கைகளுக்கு எல்லாம் இந்தப் பண முதலைகள் தீனி போடுகிறார்கள்.

சர்வதேச அளவில் இது குறித்த அழுத்தம் வராமல் இருக்க ஜெய்சங்கர் என்னும் பார்ப்பன அமைச்சர் மூலம் இந்துத்துவ வெளியுறவுக் கொள்கையை கட்டமைக்கிறார்கள். ஜெய்சங்கர் செய்வதெல்லாம் “Hindutva Diplomatic” உடன்படிக்கைகள்தான். இது பார்ப்பனர்கள் சொல்லும் தகுதி, திறமை.

பிபிசியின் ஒரு ஆவணப்படம் பாஜகவின் வளர்ச்சியில் படித்திருக்கும் இரத்தக்கறையை உலகறியச் செய்திருக்கிறது.

ஹிண்டன்பர்கின் ஆய்வறிக்கை பாஜகவின் வளர்ச்சியில் படிந்திருக்கும் ஊழல் கறைகளை உலகறியச் செய்திருக்கிறது.

2024இலாவது இந்தியா ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian